


**29.11. 2024**

**தலைப்புச் செய்திகள்**

**1. பழங்குடியின சமூகத்தை சேர்ந்த மகளிர் சுயஉதவிக்** குழுவினருடன் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உதகையில் இன்று கலந்துரையாடுகிறார்.

2. **நாட்டு மக்களின் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக்கூடிய** திறன் சுற்றுலாத்துறைக்கு உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**3. மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க** வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய அரசு உடனடியாக ரத்துசெய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

**4. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த** காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக இன்று வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5. புரோ கபடி லீக் போட்டியில் தமிழக அணி இன்று ஹரியானாவை** எதிர்கொள்கிறது

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு,** உதகை ஆளுநர் மாளிகையில் பழங்குடியின சமூகத்தை சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

குடியரசு தலைவர் தமது 4 நாள் பயணத்தின் ஒருபகுதியாக நீலகிரி பயணத்தை முடித்துக்கொண்டு நாளை திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் 9-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர் - சுற்றுலா**

**நாட்டு மக்களின் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக்கூடிய திறன்** சுற்றுலாத்துறைக்கு உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்தலங்களை மேம்படுத்த 40 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் வெளியிட்ட சமூக வலைதள பதிவிற்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்

சுற்றுலா கட்டமைப்பை மேம்படுத்த தனி கவனம் செலுத்தப்படும் என கூறிய பிரதமர், வியத்தகு இந்தியாவின் பெருமைகளை உலகின் பல்வேறு தரப்பு மக்கள் கண்டுகளித்து

பயன்பெறுவதை உறுதி செய்ய தொடர் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று உறுதியளித்தார்.

**பிரதமர் இன்று ஒடிசா மாநிலம்** புவனேஸ்வரில் நடைபெறும் பி.ஜே.பி சார்பிலான சாலை பேரணியில் பங்கேற்று பொதுமக்களிடையே உரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**ஒடிசா தலைநகர் புபனேஸ்வரில் மத்திய** உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, தேசிய காவல்துறை தலைவர்கள் மாநாட்டை இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

உள்நாட்டு பாதுகாப்பு, புதிய குற்றவியல் சட்டங்கள், கடலோர பாதுகாப்பு, சைபர் குற்றங்கள், மாவோயிஸ்ட் அச்சுறுத்தல், செயற்கை நுண்ணறிவு மற்றும் ட்ரோன் தொழில்நுட்பத்திற்கு எதிரான சவால்கள், தீவிரவாத தடுப்பு ஆகியவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

குடியரசு தலைவரின் சிறப்பு காவல்துறை விருதுகளும் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. பிரதமர் நாளை இம்மாநாட்டில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**நாடாளுமன்றம்**

**பிரபல வணிக நிறுவனத்திற்கு எதிரான** குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் 4-வது நாளாக இன்றும் நாள்முழுமைக்கும் ஒதிவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் எதிர்கட்சி உறுப்பினர்கள் இப்பிரச்சனைகளை எழுப்பி முழுக்கமிட்டனர்.

கேள்வி நேரத்தை சுமூகமாக நடத்த, ஒத்துழைக்க கோரிய மக்களவைத் தலைவரின் கூற்றுக்கு யாரும் செவிமடுக்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே, அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் இப்பிரச்சனைகள் குறித்து விவாதிக்க எதிர்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்பு நோட்டீஸிற்கு அவைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் அனுமதி மறுக்கவே எதிர்கட்சி உறுப்பினர்கள் கோஷங்கள் எழுப்பி அமளியில் ஈடுபட்டதால் அவை நாள்முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

இரு அவைகளும் வரும் 2-ம் தேதி மீண்டும் கூடும்.

❖❖❖❖❖❖❖❖

**ஜெகதீஷ்குமார்**

**இளங்கலை மாணாக்கர் தத்தம் பட்டப்படிப்புகளை** குறைந்த காலத்திலோ அல்லது கால நீட்டிப்புடனோ பயில்வதற்கான வாய்ப்புகள் விரைவில் வழங்கப்படும் என்று பல்கலைக்கழக மானியக்குழு தலைவர் திரு. ஜெகதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இதற்கான செயல்திட்ட நடைமுறைகளுக்கு பல்கலைக்கழக மானியக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்படி 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் பட்டபடிப்பை குறுகிய காலத்தில் முடிக்கும் வகையில் செமஸ்டர் ஒன்றிற்கு கூடுதல் தரப்புள்ளிகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் இளங்கலை பட்டப்படிப்பு கால நீட்டிப்பிற்கும் தரப்புள்ளிகள் அளிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் - டங்ஸ்டன் சுரங்கம்**

**மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க** வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய அரசு உடனடியாக ரத்துசெய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில் சம்மந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ள கூடாது என்று கூறியுள்ளார்

டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்படும் அரிட்டாபட்டி கிராமம் ஒரு பல்லுயிர் பெருக்க வரலாற்றுத்தலம் என்று கூறியுள்ள முதலமைச்சர், குடைவரை கோயில்கள், சிற்பங்கள், சமணச்சின்னங்கள் தமிழ் பிராமி எழுத்துக்கள், பஞ்சபாண்டவர் கல்படுக்கைகள் உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு பிரபலமானது என்றும் தெரிவித்துள்ளார்

இப்பகுதிகளில் சுரங்க நடவடிக்கைகள் மேற்கொண்டால் ஈடுசெய்ய முடியாத சேதங்களை ஏற்படுத்தும் என்றும் கவலை வெளியிட்டுள்ளார்.

மக்கள் தொகை அதிகமுள்ள சுற்றுப்புற டங்ஸ்டன் தொகுதி கிராமங்களில் சுரங்கம் தோண்டுவது மக்களை வெகுவாக பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே டங்ஸ்டன் சுரங்கம் தோண்டுவதற்கான ஏலங்களை சுரங்க அமைச்சகம் மேற்கொள்ள கூடாது என்று பிரதமர் தலையிட்டு அறிவுறுத்த வேண்டும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் - ஆய்வு**

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வேளாண்மை உழவர் நலத்துறையின் செயல்பாடுகளை சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

வேளாண்துறை திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உட்பட உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

**தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 533 அரசு மருத்துவர்** காலிபணியிடங்களுக்கு வரும் ஜனவரி 5-ம் தேதி தேர்வு நடத்தப்படும் என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மருத்துவமனைகளில் காலிபணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, மருத்துவர்களுக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**மு.பெ.சாமிநாதன்**

**தமிழ்நாட்டில் பத்திரிக்கையாளர் நலவாரியத்தில்** 3 **ஆயிரத்து** 300 பேர் உறுப்பினர்களாக இணைந்துள்ளதாக தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னையில்இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதில் 2 ஆயிரத்து 431 பத்திரிக்கையாளர்களுக்கு அடையாள அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பத்திரிக்கையாளர்களின் நலன்காக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**கடலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட ஏணிக்காரன்** தோட்டப்பகுதியில் மழைநீர் வெளியேற்றம் மற்றும் அங்கன்வாடி செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

**ஈரோட்டில் மத்திய மாநில அரசுகளின் வரி** விதிப்பிற்கு எதிராக நடைபெறும் கடையடைப்பு போராட்டத்தில் 100 கோடி ரூபாய்க்கான வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதோடு 2 லட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளதாக மாவட்ட தொழில் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மாநில அரசின் சொத்துவரி, மின்கட்டண உயர்வு, மத்திய அரசின் ஜி.எஸ்.டி உள்ளிட்டவற்றிற்கு எதிராக மாவட்டம் முழுவதும் 50 ஆயிரம் வணிக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

**சேலத்தில் போதைபொருளுக்கு எதிரான** விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தா தேவி இன்று தொடங்கிவைத்தார்.

இதில் நூற்றுக்கணக்கான மாணாக்கர் கலந்துகொண்டு போதைபொருள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச்சென்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**சபரிமலை ஐயப்பன் திருக்**கோவிலுக்கு கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவிலிலிருந்து தினமும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் இன்றுமுதல் தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த** காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்

**.. வாய்ஸ் ..**

**விழுப்புரம் மாவட்டத்தில் புயல் மழையை** எதிர்கொள்வது தொடர்பான அனைத்து துறை அதிகாரிகளின் ஆய்வுக்கூட்டம் ஆட்சித்தலைவர் திரு. பழனி தலைமையில் இன்று நடைபெற்றது.

**இந்நிலையில் கல்பாக்கத்தில் உள்ள பக்கிங்ஹாம்** கால்வாயின் நீர் கடலில் செல்லும் வகையில் முகத்துவாரம் வெட்டப்பட்டு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மழைபெய்யும் போது தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖❖

**கபடி**

**புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும்** ஆட்டங்களில் தமிழக அணி இன்று ஹரியானாவை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் குஜராத் அணி - புனேயுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**20-20 கிரிக்கெட்**

**இந்தோரில் நடைபெறும் சையது முஸ்தாக் அலி** கோப்பைக்கான 20-20 கிரிக்கெட் போட்டியில் தமிழகத்திற்கு எதிராக டாஸ் வென்று முதலில் பேட்செய்யும் குஜராத் சற்றுமுன் 4 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 24 ரன் எடுத்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**